Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 புரட்டாதி 5 ஞாயிற்றுக்கிழமை (21-9-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 282

# ஆயுதங்களை கண்டுபிடிக்க விசேட பொலிஸ் குழுக்கள்!

## 5 இடங்களில் மறைத்து வைக்கப்பட்டுள்ளனவாம்

கொழும்பு, செப்ரெம்பர் 21

இரத்மலானை விமான நிலையத்துக்குச் சமீபமாக உள்ள ராஜமாவத்தையில் வீடு ஒன்றில் இருந்து கடந்த புதனன்று றொக்கட் லோஞ்சர்கள் உட்பட பெருமளவு ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து, கொழும்பு நகரிலும் அதன் சுற்றாடலிலும் மேலும் ஐந்து இடங்களில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மறைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களைக் கண்டு பிடிக்கும் பணியில் ஈடுபடுத்த விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகவும்—

அடுத்த சில தினங்களில் இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுவிடும் என்றும்— சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இரத்மலானைச் சம்பவத்தை அடுத்து விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் ஐவரை கல்கிசைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் இருந்து பெற்ற தகவலின் அடிப்படையிலேயே மேலும் ஐந்து இடங்களில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்ட விடயம் தெரிய வந்திருப்பதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

தற்பொழுது கொழும்பு நகருக்குள் தலைமறைவாகி உள்ள தற்கொலைக் குண்டுதாரிகள் என நம்பப்படும் 12 பேர் கைது செய்யப்பட்டு, மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் ஆயுதங்கள் மீட்கப்படும் வரை புலிகளின் தாக்குதல் ஆபத்து இருக்கும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் கொழும்புக்கும் அதன் சுற்றாடலுக்கும் மேலும் பல லொறிகளில் ஆயுதங்களைக் கொண்டு வந்து சேர்க்கத் திட்டமிடப்பட்டிருந்தது பற்றி விசாரணையின் போது தெரிய வந்திருப்பதாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5-6)

## புளியங்குளம் பகுதியில் மோதல்

கொழும்பு, செப். 21

புளியங்குளத்தின் வட பகுதியில் பாதுகாப்புப் படையினர் நேற்று தாக்கிய போது விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-9)

## நல்லூரைச் சேர்ந்தவர் கைது!

கொழும்பு, செப், 21

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரைக் கொலை செய்யத் திட்டமிட்டதாகக் கூறப்படும் மற்றொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நல்லூரைச் சேர்ந்த செந்தில் மோகன் என்பவரே கைது செய்யப்பட்டவர் என்று இரகசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெளியுறவு அமைச்சரின் இல்லத்துக்கருகே உள்ள ஹோட்டலில் வைத்து கைது செய்யப்பட்ட வீரகத்தி ராஜன் என்பவர் வழங்கிய தகவலின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டார் என

[8 ஆம் பக்கம் பார்க்க]

# திலீபனின் நினைவு நாளையொட்டி கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள்

## புலிகள் தாக்கலாம் என்கிறார் பிரதிப் பொலிஸ்மா அதிபர்

கொழும்பு, செப். 21

திலீபனின் நினைவு நாள்களை ஒட்டி விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தலாம் என எதிர்பார்த்து கொழும்பிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக கொழும்புபிரதிப்பொலிஸ்மா அதிபர் திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

திலீபனின் 10ஆவது ஆண்டு நினைவு நாள்கள் கடந்த திங்களன்று ஆரம்பமாகின.

எதிர்வரும் 26 ஆம் திகதி வரை அது அனுஷ்டிக்கப்படும்

இக்காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் நாட்டின் தெற்குப் பகுதியில் தாக்குதல்களை நடத்தலாம் என பாதுகாப்பு வட்டாரங்களில் கருதப்படுகிறது.

இதேவேளை —

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் திலீபனின் நினைவுநாள் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்று வருவதாக அங்கிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவித்தன.

வன்னிப் பகுதியிலும் பல இடங்களில் அஞ்சலி நிகழ்வுகளும், அடையாள உண்ணாவிரதங்களும் நடை பெற்று வருகின்றன. (இ-ஐ-184)

# தமிழ் கோடீஸ்வரர் தலைமறைவு புலிகளுக்கு நிதி வழங்கினாராம்!

கொழும்பு, செப். 21

இரத்மலானை விமான நிலையத்தைத் தாக்கி அழிப்பதற்குத் தீட்டப்பட்ட திட்டத்துக்குப் பெருமளவில் பணம் செலவு செய்ததாகக் கூறப்படும் தமிழ்க் கோடீஸ்வரர் ஒருவரைப் பொலிஸார் தேடிவருகின்றனர்.

'' திவயின '' சிங்கள நாளிதழ் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இக்கோடீஸ்வரருடன் இரண்டு அல்லது மூன்று கரும் புலிகளும் தலைமறைவாகி விட்டனர் என்றும் —

இவர்களைக் கைது செய்ய நாட்டின் பல பாகங்களுக்கும் பொலிஸ் விசாரணைக் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் — கல்கிசைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப் புலிகளுக்குப் பெருமளவில் பணம் செலவு செய்து வந்த இக்கோடீஸ்வரர் கொழும்பில் பிரபல வர்த்தகராகத் திகழ்ந்தவர் என்றும் —

நேரடியாகவே புலிகளுக்குப் பணம் செலவு செய்து வந்தார் என்றும் விசாரணைகளில் தெரியவந்திருப்பதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (இ-5-6)

# மீண்டும் உண்ணாவிரதம் இருக்க பெற்றோர், பாதுகாவலர் ஏற்பாடு

## நேற்று வரை மகஜருக்குப் பதில் எதுவும் இல்லை

யாழ்ப்பாணம், செப். 21

யாழ். மாவட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமற் போனதாகக் கருதப்படுபவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் நேற்று முன்தினம் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முன்பாக மேற்கொண்டிருந்த அடையாள உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் யாழ். பெரிய கோயிலின் முன் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் மேற்கொண்டிருந்த உண்ணாவிரதம் தொடர்பாக கையளிக்கப்பட்ட மகஜர்களுக்கு எந்தவிதமான சாதகமான பதில்களும் நேற்று மாலை வரை கிடைக்கவில்லை என்று வடபகுதியில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டோர் சங்கத் தலைவர் [illegible] தெரிவித்தார். (இ-4-5)

# அரசு வழங்கும் நிவாரணத்தை ஏற்பதில்லை என்று முடிவு

யாழ்ப்பாணம், செப். 21

வடபகுதியில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் குடும்பத்தினருக்கு அரசாங்கம் வழங்க முன்வந்துள்ள நிவாரணத்தினைப் பெற்றுக் கொள்வதில்லை என்று மேற்படி சங்கம் தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதற்கிடையில் எதிர்வரும் புதன்கிழமை கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டோர் பாதுகாவலர் சங்க நிர்வாக சபைக் கூட்டம் ஒன்று சங்கப் பணிமனையில் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

# களுவாஞ்சிக்குடியில் புலிகள் தாக்குதல்!

## சப் - இன்ஸ்பெக்டர் ஒருவர் பலி!

கொழும்பு, செப். 21

கிழக்கில் விடுதலைப் புலிகளுடன் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பகுதியிலுள்ள பட்டிருப்பு பாலத்துக்கு அருகேயே இம் மோதல் இடம்பெற்றது என்றும் —

இந்த மோதலின்போது சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ 5-9)

# ஆய்வுகூட ஊழியர்கள் வேலை செய்ய மறுப்பு

## ஆஸ்பத்திரி வேலைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப் 21

யாழ். போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடம் நேற்று முழுமையாக இயங்காததால் வைத்திய சேவைகள் பெரிதும் பாதிப்புற்றன.

ஆய்வு கூடத்தில் கடமை புரியும் தொழில்நுட்பவியலாளர்கள் வேலை செய்ய மறுத்ததே இதற்கு காரணமாகும்.

ஆய்வுகூடக்கட்டடத்துடன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதகல் வரை பஸ் சேவை

சண்டிலிப்பாய், செப். 21 யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து பண்டத்தரிப்பு சந்திவரை நடத்தப்பட்டு வந்த பஸ் சேவை இவ்வாரம் தொடக்கம் மாதகல் வரை நீடிக்கப்பட்டுள்ளது.
(இ-135)


வட - மாகாண
தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (லிட்.)


கலந்துரையாடல்

22—09—1997

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூ.ச. பதிவாளரும் (வ/கி) யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுத்துறை சார்ந்த தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுடன் நடத்தும் முக்கியமான கலந்துரையாடல் 22-09-97 காலை 11.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. குறித்த நேரத்தில் தவறாது பங்கு பற்றுமாறு தலைவர்களையும், பொது முகாமையாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்,
வட—மாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்.
52, சோமசுந்தரம் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (49739)


## 31 ஆம் நாள் நினைவலைகள்



மண்ணில் மலர்ந்தது: 18 — 10 — 1925

விண்ணில் விரைந்தது: 22 — 08 — 1997

### அமரர் இளையதம்பி ஆசீர்வாதம்

(முன்னாள் கணக்காளர், ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை, கொழும்பு)

பாசத்துடன் எமை வளர்த்து
ஆளாக்கிய அன்புத் தெய்வமே!
எந்நாளும் உங்களை மறவோம்.

இவரின் இறுதிச் சடங்கில் பங்குபற்றி செபத்திலும், துயரத்திலும், ஊர்வலத்திலும் மற்றும் சகல விதமாக உதவி புரிந்தும் எம் துயரில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள். இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இன்று 21-09-97 காலை 11.30 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மனைவி, பிள்ளைகள், மருமகன்.

854, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (49766)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: (இலங்கை) 21—12—1938

மறைவு: (லண்டனில்) 22—08—1997



அமரர்
### பொன்னு சரவணமுத்து திவ்வியநேசன்

''கிறிஸ்து எனக்கு ஜீவன்;
சாவு எனக்கு ஆதாயம்.''
— பிலிப்பியர் - 1:21

அன்னாரின் வாழ்க்கைக்காகவும், பணிக்காகவும் இறைவனுக்கு நன்றி செலுத்துவோமாக. எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமதன்பார்ந்த நன்றி.

— குடும்பத்தினர்

இல. 35, புகையிரத நிலைய ஒழுங்கை,
சாவகச்சேரி. (சி/1607)

## நூலக வாரம்

சண்டிலிப்பாய், செப். 21 பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில், நூலக வாரம் கல்லூரி அதிபர் செல்வி போ. கந்தசாமி தலைமையில் கொண்டாடப்பட்டது.
(இ-135)

## அன்னை தெரேஸா அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 21 அன்னை தெரேஸாவின் நல்லடக்க தினமான கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை அச்சுவேலி அன்னை தெரேஸா சனசமூக நிலையத்தினரால் அச்சுவேலி மகா வித்தியாலயத்திலும், தெரேஸா மகளிர் கல்லூரியிலும் அஞ்சலிக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

அன்றைய தினம் மாலை 5. 30 மணிக்கு மேற்படி சனசமூக நிலையத்தில்பொது மக்கள் அஞ்சலிக் கூட்டமும் இடம் பெற்றதாகவும் சனசமூக நிலையத்தின் செயலாளர் எஸ். பேரின்பநாதன் தெரிவித்தார். (இ–5)

## சீரற்ற அம்புலன்ஸ் சேவை

நெல்லியடி, செப். 21 அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரியின் பழுதடைந்த அம்புலன்ஸ் வாகனத்தின் சீரற்ற சேவையினால் அவசர நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள்.

இந்த வைத்தியசாலையிலிருந்து நோயாளிகளுடன் யாழ். மருத்துவமனைக்குப் புறப்படும் இந்த அம்புலன்ஸ் பழுதடைந்துஇடையில்நின்று விடுவதாகக் கூறப்படுகிறது.
(இ–109)

## பொன்னாடை

யாழ்ப்பாணம், செப். 21 இணுவில் மேற்கு வேம்படி ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெற்ற கும்பாபிஷேக விழாவையொட்டி பெரிய புராண சமய நீதிக் கதைகள் பற்றிக் கதாப்பிரசங்கம் நிகழ்த்திய ஆசிரியமணி எம். எஸ் ஸ்ரீதயாளன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

ஆலய நிர்வாக சபைத் தலைவர் மா. நல்லையா தலைமை வகித்த இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத் தலைவர் கலாநிதி சபா. ஜெயராஜா பொன்னாடை போர்த்தி பாராட்டுரை வழங்கினார்.
(இ-9–152)

## இந்திய நடிகர் மரணம்

புதுடில்லி, செப். 21 பிரபல இந்திய குணச்சித்திர நடிகர் அனுப்குமார் நேற்றுக் காலை மும்பையில் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது (72).

1950 மற்றும் 60 களில் சினிமா ரசிகர்களை தனது நகைச்சுவை நடிப்பால் சிரிக்க வைத்த இவர், முதுபெரும் திரைப்பட நடிகர் அஷோக் குமார், மறைந்த பின்னணிப் பாடகர் கிஷோக்குமார் ஆகியோரின் இளைய சகோதரர் ஆவார். (இ–5)


யூனிவேர்சல்
கந்தர்மடம்.
97 A/L
அலகு ரீதியான
மீட்டல் வகுப்பு
ஆரம்பமாகி விட்டது.
தூய / பிரயோக
கணிதம்
திங்கள், புதன்,
சனி, ஞாயிறு
காலை 7-00 மணி
(49769)


## பாராட்டு விழா

காலம்: 21-09-97 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: காலை 8.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை

இடம்: சங்கானை வெல்வில் இலுப்பைத்தாழ் முருகமூர்த்தி தேவஸ்தான வழிபடுவோர் சபை மண்டபம்.

பாராட்டு விழா நாயகர்: நிம்மதி
**பொ. கனகரத்தினம்**
J. P. அவர்கள்

நிகழ்த்துனர்கள்: மேற்படி சபையும், சங்கானை சமூக சேவைகள் அமைப்பும்.

❖ நிகழ்வன ❖

வர அழைப்பு: இல்லத்தில் இருந்து மண்டப மேடைக்கு அழைத்து வரப்படுதல்.
வரவேற்பு: மண்டப வாசலில் திரு. T. S. தம்பையா (ஷெ சபையின் உப தலைவர்)
மங்கள விளக்கேற்றல்: திரு. வே. பொன்னம்பலம் (பாக்கியரத்தினம் காட்வெயர் ஸ்ரோஸ்)
திரு. ஆ. குணசேகரம் (ஆசைப்பிள்ளை அன் சன், நகை மாடம்)
இறைவணக்கம்: அறநெறி பாடசாலை மாணவிகள்
பொன்னாடை போர்த்தல்: திரு.பொ.நாராயணலிங்கம் (ஷெ சபையின் காப்பாளர்)
மலர்மாலை அணிதல்: உள்ளத்தால் உவகையுறும் உள்ளங்கள்.
வரவேற்புரை: திரு. சி. கந்தசாமி (ஷெ சபையின் செயலாளர்)
தலைமையுரை: திரு. தி. சிவதெட்சணாமூர்த்தி (இளைஞர் வேலைவாய்ப்பு அதிகாரி)
ஆசியுரை: திரு. து. வைத்திலிங்கம் அவர்கள் (மேலதிக அரசாங்க அதிபர்)
மதிப்புரை: திரு. கா. சந்திரராசா அவர்கள் (பிரதேச செயலர், சங்கானை)
வாழ்த்துரை: திரு. S. மகாலிங்கம் (பிரதேச செயலர் உடுவில், தலைவர், இந்து சமயப் பேரவை)

பாராட்டுரைகள்:
- திரு. நா. சந்திரமோகன் (மேற்படி சபையின் உப தலைவர்)
- T. சாந்தி
- திரு. மு. சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய அதிபர் அ. மி. பாடசாலை)
- திரு. சு. திருநாவுக்கரசு (ஷெ சபையின் உறுப்பினர்)
- திரு. க. கைலாயநாதன் (அதிபர், சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சங்கானை)
- திருமதி S. செல்லையா (அதிபர், அமெரிக்கன் மிசன் பாடசாலை, சங்கானை)
- திரு. K. திரவியம் (பொறுப்பதிகாரி, உப அலுவலகம், சங்கானை)
- திரு. N. சிவசுப்பிரமணியம் (உப தலைவர், ப.நோ. கூ. சங்கம், சங்கானை)
- திரு. S. இராசதுரை (தலைவர், பயிரியல்துறை யாழ். பல்கலைக்கழகம்)
- திரு. க. உபேந்திரன் (செயலாளர், சமூக சேவைகள் அமைப்பு)
- திரு. ந. சர்வானந்தம் (கிராம சேவகர், சங்கானை)
- திரு. ந. மகிழ்ராசா (கிராம சேவகர், சங்கானை)
- திரு. நா. நாகலிங்கம் (உப தலைவர், சமூக சேவை அமைப்பு, சங்கானை)
- திரு. செ. கோபாலகிருஸ்ணன் (பொருளாளர், சமூக சேவை அமைப்பு, சங்கானை)
- திரு. M. டெனிசியஸ் (தபால் அதிபர், சங்கானை)
- திரு. K. கணேசலிங்கம் (கல்விப் பணிப்பாளர், சங்கானை)
- திரு. உதயசூரியன் (இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி. மேற்கு செயலாளர்)
- திரு. சி. இராசலிங்கம் J. P.
- திரு. நடேசு J. P.
- திரு. மு. தியாகராசா (ஆசிரியர், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி)
- திரு. கு. ஜெகநாதன் (ஆசிரியர்)
- திரு. வ. சண்முகம் (இளைப்பாறிய எழுதுவினைஞர்)
- Dr. T. அருமைத்துரை (R. M. O. அரசினர் வைத்தியசாலை, சங்கானை)

நன்றியுரை: செல்வி சிவாஞ்சலி சிவன்நேசன் (ஆசிரியை, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)
பதிலுரை: நிம்மதி பொ. கனகரத்தினம் J. P.

❖ வாழ்த்திசையும் இன்னிசையும் ❖

செல்வி பங்கயச்செல்வி தவபாக்கியநாதன்
வயலின்: செல்வி சந்தானலட்சுமி அப்புத்துரை
மிருதங்கம்: திருமதி கானகோகிலம் ஜெயம்

நற்சேவை செய்ய நினையுங்கள்.
நற்சேவை செய்ய விரையுங்கள்
நற்சேவை செய்ய இணையுங்கள்,
நற்சேவையே நிதம் செய்யுங்கள்
நற் பலன் நிச்சயம் பெறுவீர்கள்.

நன்றி!

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**வெல்வில் இலுப்பைத்தாழ் முருகமூர்த்தி வழிபடுவோர் சபை,**
**சங்கானை சமூக சேவைகள் அமைப்பு.** [49767]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பிணிகள் மீதான 'எய்ட்ஸ்' பரிசோதனை

# அநீதியான செயல் எனக் குற்றச்சாட்டு!

## லண்டன் மருத்துவ சஞ்சிகையில் திடுக்கிடும் தகவல்

நியூயோர்க், செப். 21

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 'எய்ட்ஸ்' நோய்க்கிருமியான ''எச். ஐ. வி'' யினால் பீடிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் மீது அமெரிக்க மற்றும் ஐரோப்பிய மருத்துவ ஆய்வாளர்கள் கடந்த இரண்டு ஆண்டு காலமாக நடத்திவந்த பரிசோதனைகள் மருத்துவ தார்மீக நெறிமுறைகளை மீறும் செயல் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

ஆயிரக்கணக்கான சிசுக்களின் மரணத்துக்குக் காரணமாக அமையவுள்ள இந்த மருத்துவ ஆய்வு தொடர்பான திடுக்கிடும் தகவல்களை லண்டனில் வெளியாகும் புகழ் பெற்ற மருத்துவ சஞ்சிகையான ''நியூ இங்கிலண்ட் ஜேர்னல் ஒவ் மெடிசின்'' என்ற சஞ்சிகை வெளியிட்டிடிருக்கிறது.

அரசாங்க நிதி பெற்று பணியாற்றும் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய மருத்துவ ஆய்வாளர்கள் ஆபிரிக்கா, ஆசியா மற்றும் கரீபியன் பகுதிகளைச் சேர்ந்த 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட எய்ட்ஸினால் பீடிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் மீது இந்த மருத்துவ ஆய்வினை மேற்கொண்டு வந்தனர்.

''எய்ட்ஸ்'' பீடித்த தாய் ஒருவரிடம் இருந்து அவரது குழந்தைக்கு ''எச். ஐ. வி'' கிருமி பரவுவதைத் தடுக்கும் செலவு குறைந்த மருந்து ஒன்றைக் கண்டுபிடிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆராய்ச்சியின் போது —

அத்தகைய மருந்தை இந்தக் கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கிப் பரீட்சிக்கப்பட்டது.

கர்ப்பிணிப் பெண்களுக்கு அந்த மருந்தை வழங்க வேண்டிய சரியான அளவைக் கண்டுபிடிப்பதற்காக சுமார் 12 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்களில் அரைவாசிப் பேருக்கு வெவ்வேறு அளவுகளில் அந்த மருந்து கொடுக்கப்பட்டதாகவும்—

எஞ்சிய அரைவாசிப் பேருக்கு அந்த மருந்தைக் கொடுக்காமல் போலியான வேறு வெற்று மாத்திரைகள் வழங்கப்பட்டதாகவும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

''ஏ. இசட். ஈ'' எனப்படும் இந்த மருந்து தாயிடம் இருந்து குழந்தைக்கு எச். ஐ.வி. கிருமிகள் கடத்தப்படுவதை 60 சதவீதத்தால் குறைக்கக்கூடியது என்றும்—

அரைவாசிப் பெண்களுக்கு இந்த மருந்தை வழங்காமல் விட்டது மருத்துவ தார்மீக நெறிகளையும், சர்வதேச சட்ட விதிகளையும் மீறும் செயல் எனவும் 'நியூ இங்கிலண்ட் ஜேர்ணல் ஒவ் மெடிசின்' சஞ்சிகை குற்றஞ் சாட்டியுள்ளது.

இந்த மருந்தைப் பெற்றுக் கொள்ளாத ஆயிரக் கணக்கான கர்ப்பிணிகளின் சிசுக்கள் உயிரிழக்கும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரிய சமாதான பேச்சு தோல்வி

நியூயோர்க், செப். 21

கொரிய தீபகற்பத்தில் நெருக்கடியைத் தவிர்க்கும் நோக்கில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்துள்ளது.

வடகொரியா, தென்கொரியா, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இந்த சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்கு பற்றினர்.

தென்கொரியாவில் அமெ

உலக அரங்கில்

ரிக்கத் துருப்புக்கள் நிலை கொண்டிருப்பது தொடர்பான விடயமும் பேச்சுவார்த்தக்கான நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட வேண்டும் என்று வடகொரியா வலியுறுத்தியதை அடுத்தே பேச்சுக்கள் இணக்கமின்றி முடிவடைந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது. (ஐ)

# ஆபத்தான புகைமண்டலம் திரண்டதை அடுத்து

# மலேசியாவின் கிழக்குப் பகுதியில்

# அவசரகால நிலை பிரகடனம்!

## சிங்கப்பூரிலும் உஷார் நிலை!

கோலாலம்பூர், செப். 21

மலேசியாவின் கிழக்குப் பகுதியான சரவோக்கில் வானில் திரண்ட புகைமண்டலம் காரணமாக அங்கு அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அபாயகரமான தீய விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய சாம்பல் புகை மண்டலம் வானை மூடியிருப்பதால் அங்கு விமான சேவைகள் அனைத்தும் நிறுத்தப் பட்டுள்ளன.

வளியில் மாசுச் சுட்டெண் 658 இல் இருந்து 521 ஆகக் குறைந்துள்ளது. எனினும் அவசரகால மட்டமான 500- க்கு மேலாகவே அது தொடர்ந்து காணப்படுகிறது.

இந்தோனேசியாவின் சுமாத்திரா மற்றும் போர்ணியோ தீவுகளில் ஏற்பட்ட பெரும் காட்டுத்தீயினால் வளிமண்டலத்தில் பரவிய சாம்பல் துகள் கலந்த பெரும் புகைமண்டலத்தினால் மலேசியா, சிங்கப்பூர் போன்ற அயல் நாடுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பது தெரிந்ததே.

மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரிலும், ஏனைய பகுதிகளிலும் இந்தக் கரும் புகை மண்டலம் திரண்டுள்ளது.

காட்டுத் தீயினால் பரவிவரும் இந்தப் புகைமண்டலம் பெருமளவில் திரளும் ஆபத்து ஏற்படும் பட்சத்தில் அதுகுறித்து மக்களுக்கு உடனடியாக அறிவிப்பதற்கான விசேட ஏற்பாடுகளை சிங்கப்பூர் அரசும் எடுத்துள்ளது.

இந்தப் பிரதேசத்து வளியில் கலந்துள்ள மாசின் அளவு தொடர்ந்து அவதானிக்கப்பட்டு வருகிறது. (ஐ)

# கிராமத்தில் வீழ்ந்த ஷெல்லினால் காஷ்மீரில் 10 பேர் மரணம்

இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரின் வட பகுதியில் கிராமம் ஒன்றில் அடுத்தடுத்து வீழ்ந்த மூன்று மோட்டார் ஷெல்களில் சிக்கி 10 பொதுமக்கள் உயிரிழந்தனர், ஒன்பது பேர் காயமடைந்தனர்.

இந்த ஷெல்கள் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினரால் ஏவப்பட்டதாகக் கிராமவாசிகள் கூறியுள்ளனர். ஆனால் இக்குற்றச் சாட்டை அவர்கள் மறுத்துள்ளனர். இந்திய இராணுவத்தினரே அவற்றை ஏவியதாக எல்லைப் பாதுகாப்புப் படையினர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

முதலாவது ஷெல் வீடு ஒன்றின் மீது வீழ்ந்து வெடித்ததும், அந்த வீட்டில் இருந்தவர்களும், அயலவர்களும் செய்வதறியாமல் அங்குமிங்குமாக வெளியே ஓடியதாகவும் அச்சமயம் அடுத்த இரு ஷெல்களும் அவர்கள் மீது வீழ்ந்து வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இச் சம்பவம் தொடர்பாக பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)

## தாய்லாந்தில் ஹெலி விபத்து

தாய்லாந்தின் தென் பகுதியில் அரசுக்குச் சொந்தமான ஹெலிக் கொப்ரர் ஒன்று வீழ்ந்து நொறுங்கியதில் 14 பேர் பலியாகினர், 7 பேர் காயமடைந்தனர்.

தாய்லாந்துதேச மன்னரின் ஆதரவுடன் தென் பகுதி மாவட்டம் ஒன்றில் அமுல் செய்யப்படும் கிராம அபிவிருத்தித் திட்டத்தை ஆய்வு செய்வதற்காக படையினரையும், ஆய்வாளர்களையும் ஏற்றிச் சென்ற ஆறு ஹெலிக் கொப்ரர்களில் ஒன்றே மலைப்பகுதியில் மோதி விபத்துக்குள்ளாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# அரசின் தீர்வு யோசனை, அரசமைப்பு சீர்திருத்தம் என்பவற்றுக்கு

# மகாசங்கத்தின் அங்கீகாரம் பெறுமாறு கோரி

# போராட்டம் நடத்த பௌத்த பிக்குமார் முடிவு

கொழும்பு, செப். 21

தீர்வு யோசனைகள், அரசமைப்புச் சீர்திருத்தம் போன்றவற்றை மகாசங்கத்தினரின் அங்கீகாரம் இன்றி நடைமுறைப்படுத்தக் கூடாது.

இதை அரசுக்கு வலியுறுத்தும் நோக்கில் போராட்டம் ஒன்றை உடனடியாக ஆரம்பிப்பது என மகாசங்கத்தினர் தீர்மானித்துள்ளனர்.

கடந்த புதனன்று சிங்கள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையை கண்டி மல்வத்த பீடாதிபதியிடம் சமர்ப்பித்த பின்னர் அங்கு நடந்த கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதன்கிழமை சுப நேரமான மாலை 4 மணி 32 நிமிடத்துக்கு சிங்கள ஆணைக்குழுவின் தலைவரான ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ்.டபிள்யூ. வல்பிட்ட தலைமையிலான குழுவினர் கண்டி மல்வத்த பீடாதிபதி ஸ்ரீ விபஸ்ஸி மகாநாயக்க தேரரிடம் சிங்கள ஆணைக் குழுவின் இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்தனர்.

### மரியாதை வேட்டு

அறிக்கைசமர்ப்பிக்கப்பட்ட சமயம் 21 மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. சுமார் 2 ஆயிரம் பௌத்த தேரர்கள் அங்கு சமூகமளித்திருந்தனர்.

பொ. ஐ. முன்னணி, ஐ. தே. க. ஆகியவற்றைச் சேர்ந்த பிரமுகர்களும் அங்கு குழுமியிருந்தனர்.

தனிநாடு கோருபவர்களைத் தடுக்கும் வகையிலான சட்டம் அரசமைப்பில் இடம்பெற வேண்டும் என்று சிங்கள ஆணைக்குழு அந்த இடைக்கால அறிக்கையில் சிபார்சு செய்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள மேலும் சில சிபார்சுகள் வருமாறு:-

★ நாட்டின் இறைமைக்கும், பிரதேச ஒற்றுமைப்பாட்டுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதால், அதை எதிர்த்துப் பிரசாரம் செய்யவேண்டும்.

★ அதிகாரப் பரவலாக்கல் யோசனைக்கு எதிராக வாக்களிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர்களது தொகுதி மக்கள் கேட்க வேண்டும்.

★ அரசியல் ரீதியாகவும், இன ரீதியாகவும் நாட்டில் பிளவு இல்லை என்பதை அரசின் யோசனைகளில் உறுதி செய்ய வேண்டும்.

★ நாட்டின் அரசியல் தீர்வுத்திட்டம் மற்றும் அதிகார பகிர்வுத் திட்டம் எதுவாயிருந்தாலும் அது ஒற்றையாட்சிக்கு உட்பட்டே இருக்க வேண்டும்.

★ அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துவதாக அமைந்துள்ள அரசின் தீர்வுத்திட்டம் சிங்களவர்களை மட்டுமல்லாது ஏனைய சமூகத்தவர்களையும் வெகுவாகப் பாதிக்கும். அத்துடன் அது பௌத்தமத தாற்பரியங்களுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியது. இத்தீர்வுத் திட்டம் நாட்டைக் கூறுபோடவே வழிவகுக்கும்.

### தமிழருக்கு அநீதி இழைக்கப்படவில்லை

ஆணைக்குழு அறிக்கை கையளிக்கப்பட்ட வைபவத்தில் உரையாற்றிய அமரபுர நிக்காயத் தலைவர் வண. படிகே பஞ்சாசீக தேரர் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது;-

இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்பதை ஏனைய சமூகத்தவர்கள் புரிந்து செயற்பட்டால் எதுவித பிரச்சினையும் இன்றி வாழமுடியும். தமிழ் மக்களுக்கோ, வேறு எந்த சிறுபான்மை சமூகத்தவருக்கோ அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகக் கூறுவதில் உண்மை இல்லை. அரசியல் லாபம் தேடுவோர்தான் சிறுபான்மைச் சமூகத்தவர்களுக்கு உரிமை மறுக்கப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர்— என்றார்.

நாட்டைத் துண்டாடும் அரசியல் திட்டத்தை தோற்கடிக்கவும், அரசமைப்புக்கு விரோதமான அபிப்பிராய வாக்கெடுப்புக்கு எதிராகவும் மக்கள் அணி திரளவேண்டும் என்று அங்கு கூடியிருந்த சங்கத்தினர் அழைப்பு விடுத்தனர்.

இன்று இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதுவித பிரச்சினையும் இல்லை. அவர்கள் நாட்டில் எங்கு வேண்டுமானாலும் போகலாம், வாழலாம். ஆனால் சிங்கள மக்களால் வடக்குக்கோ, கிழக்குக்கோ செல்ல முடியாது.

சிங்கள மக்களால் அநுராதபுரத்துக்கு அப்பால் செல்ல முடியவில்லை. தமிழர்களும், சிங்களவர்களும் அநுராதபுரம் முதல் கதிர்காமம் வரை எங்கும் பரந்து வாழ்கிறார்கள். நிலைமை அப்படி இருக்கும் போது அவர்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது.

பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தாமல் இல்லாத இனப்பிரச்சினையைக்காட்டி அரசியல்வாதிகள் நாடகமாடுகிறார்கள் என்று மகாசங்கத்தினர் பலர் தமது உரையில் குறிப்பிட்டனர்.

மதிநாயக்க பத்மநாயக்க தேரர் என்பவர் தமது உரையில் கூறியதாவது:-

''வடக்கிலும், கிழக்கிலும் 273 பௌத்த விகாரைகள் இருந்தன. 33 ஆயிரம் சிங்கள குடும்பங்கள் இருந்தன. இப்போது அவை எல்லாம் அங்கு இருக்கின்றனவா என்பதை எண்ணிப் பாருங்கள்.

நமது நாட்டை கூறுபோட்டுக் கொள்ள விடக் கூடாது. பௌத்தர்களாகிய எமக்கு இருப்பது இலங்கை என்னும் இந்த ஒரு நாடு தான்.

இந்த நாட்டை அதிகாரப் பரவலாக்கலுக்கு உட்படுத்தினால் 'நாடு' பிளவுபட்டு விடும். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய நாம் என்றும் ஐக்கியமாக வாழ்

[ 5ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ச. ச. நிலைய நன்கொடை

அச்சுவேலி, செப். 21

வலி. கிழக்கு பிரதேச சபைப் பிராந்தியத்தில் செயற்படும் சனசமூக நிலையங்களுக்கு இவ்வாண்டுக்கான நன்கொடை நிதியாக 88 ஆயிரம் ரூபா வழங்கப் படவுள்ளது.

வடக்கு-கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் வழங்கியுள்ள 88 ஆயிரம் ரூபா நன்கொடை நிதி அச்சுவேலி, உரும்பிராய் புத்தூர், நீர்வேலி, கோப்பாய் உபஅலுவலக பகுதிகளில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சனசமூக நிலையங்களுக்கு பங்கிட்டு வழங்கப் படும். (ஐ-11)

---

பத்தாவது

## பிறந்த தின வாழ்த்து



செல்வன்

### கந்தையா மனோஷாந்

**21 - 09 - 1997**

நெடுந்தீவு துறைமுகத்தடி
கந்தையாவின் அருந்தவப் புதல்வன்

மனோஷாந் தனது பத்தாவது பிறந்த நாளை இல. 466, 5ஆம் யூனிற், யோகபுரம், மல்லாவியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகவும், குதூகலமாகவும் கொண்டாடுகிறார். மனோஷாந் விநாயகர் அருளால் சீருஞ் சிறப்புடனும் கல்வி வளம் பெற்று பல்லாண்டு வாழ நெடுந்தீவில் இருந்து அப்பா கந்தையா அன்புடன்வாழ்த்துகிறார்.

ஆ. கந்தையா,
(அப்பா)

துறைமுகத்தடி,
நெடுந்தீவு-13.

(49749)

---

## D. M. I.

233, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**A/L 98**
**DAY CLASS**
( பகல் நேர வகுப்பு )

அனைத்துப் பாடங்களுக்கும் மீட்டல் வினா-விடையும் நடைபெறுகின்றன.

**- D. SAM.**

(சி/1608)

---

## T. V. S SUZUKI SCOOTY MOTOR BIKES

பெண் பிள்ளைகளுக்கு மிகப்பொருத்தமான வாகனம்.

விநியோகத்தர்கள்:
**பிறிமியா ஓட்டோ மோட்டிவ்ஸ்**
(குருடீசல் என்ஜினியேர்ஸ் கட்டடம்)
338, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

(49744)

---

## தமிழ்த் தட்டெழுத்தாளர் தேவை

விவரங்களுக்கு:
தினமும் 3-30 — 5-30 ற்குள்

**CASIO INSTITUTE,**
3rd Mile Post
Kalviyankadu.

(49743)

---

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

# பதவி வெற்றிடம்

கீழ்க் குறிக்கப்படும் பதவிகளுக்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

1. வர்த்தக முகாமையாளர் இல. 106: 9

சம்பளம்: 1405 — 60 x 4 — 75 x 11 — 2470
வயது: 23 இல் இருந்து 40 வயது வரை.

தகைமைகள்:

(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 8 ஆம் சம்பளத்திட்ட முகாமை / தொடர்புபட்ட துறையில் மேற்பார்வை மட்ட பதவியொன்றில் மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 9 ஆம் சம்பளத்திட்டத்தில் அப்படிப்பட்ட பதவியொன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிப் பரீட்சையில் சித்தி அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் விற்பனவு/ பொருள்கள் வழங்குதல் மற்றும் விநியோகம் செய்தல்/ பொருள்கள் ஏற்றுமதி/ இறக்குமதி அலுவல்கள் ஆகிய துறைகளில் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் முகாமைமட்ட பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது,

(இ) கூட்டுறவுச் சங்க ஊழியர்(உயர்தரம்) சான்றிதழ்/ க.பொ.த.(உயர்தரம்) சான்றிதழ் பரீட்சையில் மூன்று(3) பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் விற்பனவு/ பொருள்கள் வழங்குதல் மற்றும் இறக்குமதி ஆகிய துறைகளில் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் முகாமை மட்ட பதவியொன்றில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

2. எழுதுநர் இல. 302: 15

சம்பளம்: 1030 - 20 x 10 — 25 x 5 — 1355
வயது: 20 இல் இருந்து 35 வயது வரை.

தகைமைகள்:

(அ) கூ. ச. ஊ. 14 ஆம் சம்பளத்தில் எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது.

(ஆ) க. பொ. த. (சாதாரணதரம்) சான்றிதழ்/ கணிதம்/ வர்த்தக எண் கணிதம்/ எண்கணிதம் மற்றும் சிங்கள மொழி/ தமிழ் மொழி உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி.

★ சங்கத்தால் வழங்கப்படும் இதர படிகளும் சம்பளத்துடன் வழங்கப்படும்.
★ கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
★ விண்ணப்ப முடிவு திகதி - 10 - 10 - 1997.
★ சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பொதுமுகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம் திருநெல்வேலி என்ற முகவரியிட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு 10 - 10 - 97 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

தகுதியற்றதும் முடிவு திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பொது முகாமையாளர்**
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.

(சி-1603)

---

## நன்றி நவிலல்

### செல்வி பைரவி கணானந்தன்

செல்வி பைரவி கணானந்தனின் மறைவுச் செய்தி அறிந்து அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும், நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கருணானந்தன், சச்சிதானந்தன்,
நவானந்தன், ஸ்ரீரங்கநாதன்,
இராசவல்லன், விபுலானந்தா
குடும்பத்தினர்கள்.

தில்லைகட்டி வீதி,
சுன்னாகம்.

(சி/1604)

---

## முதலாண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திவசமும்

அன்னை மடியில்: 11 — 12 — 1941



ஆண்டவன் மடியில்: 01 — 10 — 1996

### அமரர் புவனேஸ்வரி கமலநாதன்

திதி:- 21 - 09 - 1997

அன்பே அருமணியே அமுதே உன்
அருள் நாடி அருகணைந்த எந்தனை
அலைகடல் துரும்பாக அலையவிட்டு
அமலன் பாதம் அடைந்தனையோ?
ஆறாத் துயரால் நீறாகும் அடியேனும்
அமலன் பாதம் அணைந்திடும்
அறவழி காட்டி நின்அருகணைத்திடுவாய்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கணவன், சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்,
மருமக்கள். பெறாமக்கள்.

''கிரவுஞ்சகிரி''
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(49753)

---

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 01 — 07 — 1978



மறைவு: 21 — 09 — 1993

செல்வன்

### குமாரகுலசிங்கம் சிவகுமார்

( சிவா )

அன்புச் செல்வனே! ஆண்டு நான்கு சென்றாலும்
உன் அழகு முகம் எம் நெஞ்சினிலே அணையாத
தீபமடா!
அம்மாவின் கண்களிலே வற்றாத கங்கையடா!
அப்பாவின் நெஞ்சினிலே ஆறாத்துயரமடா!
உன்னைப்போல் ஒரு தம்பியை இனி எப்போ
காண்போமடா:

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அக்காமார்,
அண்ணன், அத்தான்மார்.
மருமக்கள்.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(49759)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்மநாபா கொலை வழக்கு விசாரணை இடைநிறுத்தம்

ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தின் செயலாளர் நாயகம் பத்மநாபா உட்பட அந்த அமைப்பைச் சேர்ந்த சில போராளிகள் சென்னையில் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கு விசாரணையை எதிர்வரும் புதன் கிழமை வரை நிறுத்தி வைக்குமாறு சென்னை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடந்த இப் படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை விசேட 'தடா' நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சின்ன சாந்தன் என்பவர் தற்சமயம் இலங்கையில் உள்ள இருவரை தம் சார்பில் விசாரிக்க வேண்டும் என்று கோரி 'தடா' நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இலங்கை குடிவரவுத் துறையின் உதவி ஆணையாளரான பல்கெதர அபயக்கோன் பண்டாரா என்பவரையும், யாழ்ப்பாணத்தில் உள்ள பயண நிறுவனமான 'வெங்கடேஸ் வரா ரவல் ஏஜென்ஸி' யைச் சேர்ந்த ராகவன் என்பவரையும் சாட்சிகளாக விசாரிக்க வேண்டும் என்றும்—

அதன் மூலம் இப் படுகொலைச் சம்பவம் நடந்த சமயம் தாம் இலங்கையில் தங்கியிருந்ததை நிரூபிக்க முடியும் என்றும் சின்ன சாந்தன் தமது மனுவில் கோரியிருந்தார்.

ஆனால் வழக்கை விசாரித்துவரும் விசேட 'தடா' நீதிமன்றம் அவரது மனுவை ஏற்க மறுத்து நிராகரித்து விட்டது. அதனைத் தொடர்ந்து அவர் சென்னை உயர் நீதிமன்றத்துக்கு மனுச் செய்தார்.

அவரது மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம் அந்த மனு குறித்து விசாரணை செய்து முடிவு எடுக்கும் வரை — எதிர்வரும் 24 ஆம் திகதிவரை — வழக்கு விசாரணையை இடைநிறுத்துமாறு தடா நீதிமன்றத்துக்கு உயர் நீதிமன்ற நீதிபதி எஸ். எம். சித்திக் உத்தரவிட்டார்.

பத்மநாபா படுகொலை தொடர்பான வழக்கில் முன்னாள் அமைச்சரும், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினருமான சுப்புலட்சுமி ஜெகதீஸன், முன்னாள் உள்துறைச் செயலர் நாகராஜன், மறுமலர்ச்சி தி.மு.க. தலைவர் வை. கோபாலசாமியின் சகோதரர் ரவிச்சந்திரன் உட்பட 11பேர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. (ஐ)

## விஞ்ஞான தின விழா

மானிப்பாய் மகளிர் கல்லூரி விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான தின விழாவும் ''சங்கேதம்'' சஞ்சிகை வெளியீடும் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வி. கே. கணேசலிங்கமும், கௌரவ விருந்தினராக யாழ். வலையம்—II கல்விப் பணிப்பாளர் சி. சிவராசாவும், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய்பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஆர். இருதயநாதன், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் செ. கேசவராஜன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-9)

# மேலும் 69 முறைப்பாட்டுக்காரர்கள் ஞானம்ஸ் ஹொட்டலுக்கு அழைப்பு!

யாழ்ப்பாணம், செப். 21

யாழ். மாவட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதானோர், காணாமற் போனோர் தொடர்பான இராணுவப் பொலீஸ் குழுவினரின் விசாரணை நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை யாழ். ஞானம்ஸ் ஹொட்டலில் நடைபெறவுள்ளது.

இந்த விசாரணக்கு 69 பேரின் பெற்றோர்கள், உறவினர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களை தத்தமது பிரிவு கிராம அலுவலர்களுடன் விசாரணைக்கு வருமாறு கோரப்பட்டுள்ளது.

அழைக்கப்பட்டோரின் முகவரி தெரியாத காரணத்தால் கைது செய்யப்பட்ட காணாமற்போனோரின் பெயர் விவரங்கள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன.

பின்வரும் 69 பேரின் உறவினர்களும், பெற்றோர்களுமே விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலருக்கு அவர்களது வதிவிட முகவரியும், வேறு சிலருக்கு அவர்கள் கைது செய்யப்பட்ட அல்லது காணாமற்போன இடமும் குறிப்பிடப்பட்டுள்ளன.

கோபாலசிங்கம், அம்பிகை பாலன் — நாவற்குழி. பரணி ஆசீர்வாதம் — மல்வம், இராஜேஸ்வரி — அம்பாள்வீதி, உடுவில். வி. அற்புதநேசன்— தாளையடி. ஏ. கலிஸ்ரன்— சித்தங்கேணி மத்தி. எம். ஞானராசன் — உடையர் புலம், ஆனைக்கோட்டை. பி. குணசேகரன் — கோயிலாக்கண்டி மேற்கு, கைதடி. எஸ். ஆர். கில்பட் — முருகமூர்த்திகோயில், ஆனைக்கோட்டை. தனபாலசிங்கம் கிருஷ்ணலிங்கம் — தட்டாதெருச்சந்தி. சுப்பிரமணியம், முத்துக்குமார் — ஆரியகுளம் சந்தி. ஆர். இராசரட்ணம்— மண்டைதீவு. எஸ். சாரா ரூபன் — கோப்பாய் தெற்கு. பரமசாமி, சசிகரன் — தனங்கிளப்பு.

பி. சதீஸ்வரன் — புத்தூர் கிழக்கு. எஸ். சற்குணலிங்கம், எஸ். சண்முகலிங்கம் — நல்லூர். ப். சாந்தரூபன் — ஆனைக்கோட்டை. என். ஜீவகுமார் ஸ்ரீகரன்— பாண்டியன் தாழ்வு. எஸ். சிவலிங்கம் -- ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை. ரி. சுந்தரராஜா — நாவற்குழி. எஸ். சுதாகரராசா — கோப்பாய் வடக்கு. செல்வரட்ணம் அருந்தவராஜா — உரும்பிராய். கிருஷ்ண பிள்ளை குணேந்திரராஜா — உரும்பிராய்ச்சந்தி. கே. தர்மேஸ்வரன் — சுதா பேக்கரி றோட், உரும்பிராய் மேற்கு. பெனாட் ஜோசப் மோகன் அகிலன் — நாவற்குழி.

தயாகுணம் தயாபரன் — நாவற்குழி சந்தி. கனகலிங்கம் அமிர்தலிங்கம் — கோண்டாவில். எஸ். சந்திரன் — கோண்டாவில் டிப்போ. செல்லையா கந்தசுவாமி — கோண்டாவில். நவரட்ணம் கதிர்காமவேல்— திருநெல்வேலி. பத்மநாதன் பத்மராஜா— திருநெல்வேலி சந்தி. எஸ் செல்வகுமார்— இராஜாவீதி, கோப்பாய் தெற்கு. ரி. வரதராசா — கோண்டாவில். நவரட்ண ராஜா, ஆனந்தராஜா — அச்சுவேலி. தெய்வேந்திரன், பிரபாகரன் — ஆசாரி லேன், கோப்பாய் மத்தி துரைராஜா பாலச்சந்திரன்— அரியாலை. திருவள்ளுவர், செல்லையன் — நல்லூர் கோயிலடி. அமிர்தநாதர் கிறிஸ்ரி ஜெயநாதன்— கொழும்புத்துறை. ஏ. தயாபரன் —சிப்பித்தரை, கொக்குவில். பரமநாயகம், ஜெகநாதன் — அரியாலை. வினாசித்தம்பி கோனேஸ்வரன்— அரியாலை. தர்மலிங்கம் ஜெயகாந்தன்— அரியாலை. காளிமுத்து கோகிலதாசன்— செம்மணிச் சந்தி. செல்வராஜா ரகுநாதன்— முடமாவடி, நல்லூர். துரைராஜா ராஜா— குருநகர். ஆர். இராஜநாயகம்— குருநகர். பற்குணசிங்கம் இராஜேந்திரன்— நல்லூர். நீகன் றொகான்— கோயில் வீதி, யாழ்ப்பாணம். செல்வநாயகம் தனபாலசிங்கம்— அரியாலை. என். தேவராணி— குடும்பநல சுகாதார உதவியாளர், யாழ். மாநகரசபை.

ரி. தியாகராஜா— அரியாலை. து. ஜதீஸ்— யாழ்ப்பாணம். பாக்கியநாதர் யூலியஸ்— யாழ்ப்பாணம். ஆர். ஆர். லெபனான்— யாழ். நகர். ஜேம்ஸ் பிரபாகரன் மனுவேற் பிள்ளை— 105, கோயில் வீதி, யாழ்ப்பாணம். மரியதாஸ் கியூரோன்— யாழ்ப்பாணம். நாகரட்னம் சிவரூபன்—ஸ்ரீதர் தியேட்டர், யாழ். எம். தவராஜா— யாழ். நகர். என். உதயகுமார்— அம்மன் கோயிலடி. ஜெகநாதன் விஜயகுமார்— யாழ். நகர். சிவசம்பு விஜயகாந்தன்— 14, 1-ம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை. எஸ். மோகன் தச்சன்தோப்பு, நாவற்குழி. துரைசிங்கம் குணசேகரன்— 138/1, கொண்டலடி றோட். செல்லத்துரை நந்தகுமார்— புத்தூர் கிழக்கு, புத்தூர். துரைசிங்கம் மனோகரன்— இல. 7, தொடர்மாடி, குருநகர். எஸ். சாந்தகுமார்— 50/15, செட்டித்தெரு, நல்லூர். திருச்செல்வர் ஜேம்ஸ்சதீஸ்— 17, புதிய வீடமைப்புத் திட்டம், குருநகர். சுப்பிரமணியம் மூர்த்தி— 132, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். நடராஜா முத்துலிங்கம்— 210, நாவலர் றோட், யாழ்ப்பாணம். தவபாலன், தர்மபாலன்— வீரபத்திரர் கோயிலடி, கச்சாய் றோட், சாவகச்சேரி. (ஐ-9)

# கலைஞனின் தொழிற்பாட்டை நுண்ணியதாக நோக்கும் நூல்

இனிமை, எளிமை, உணர்வு, ஓட்டம், அழகு, கருத்தாழம் ஆகியவை நிறைந்த கவிதைகளை இயற்றி வெற்றிகண்டகாரை. செ. சுந்தரம்பிள்ளை நடிகமணியின் வாழ்வும் அரங்கும் என்ற கருத்தாழம் மிக்க, படிப்போரை எளிதில் கவரத்தக்க நூலை எழுதி வெளியிட்டமை எண்ணி மகிழத்தக்கது.

நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்க்கையையும், அவரது நாடக உலக விவரங்களையும் விளக்கமாக எழுதி தனது படைப்பாற்றலையும், கற்பனை வளத்தையும், சொல்லாட்சியினையும் படிப்போரை ஈர்க்கும் வண்ணம் எடுத்துக்காட்டியுள்ளார் கவிஞர்.

மரபு வழிக் கூத்துகளைக் பேணிக்காத்த முன்னோடியும், நடிகமணியின் வளர்ச்யிற் பெரும்பங்காற்றியவருமாகிய பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களுக்கு இந்நூல் காணிக்கையாக்கப்பட்டுள்ளது. நூலெழுந்த வரலாறு பற்றி நூலாசிரியருரை, முதுதமிழ்ப் பேராசிரியர்கார்த்திகேசுசிவத்தம்பி அவர்களது முன்னுரை என்பவற்றைப் படிக்கும் போது இந்நூல் பலரது நேரடிஅனுபவ உண்மைகளை எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளமை தெற்றெனத் தெரிகின்றது.

வைரமுத்துவின் வாழ்வு பற்றியது ஒரு பகுதி; மற்றையது அரங்கு பற்றியது. வாழ்வு பற்றி நூலாசிரியர் கூறும் போது நடிகமணி பிறந்து வளர்த்த செய்தியை மட்டும் கூறாமல் அவருடைய கலையுலக வாழ்வு எவ்வாறு பிறந்து வளர்ந்தது என்பதையும் விவரிக்கிறார்.

இந்நூலைப் படிக்கும் போது வைரமுத்துவின் அரங்குடன் இணைத்து எழுத்துரு, தயாரிப்பாளர், நடிகர், மேடைக்காட்சி ஒப்பனை, ஒலி, ஒளி, பக்கவாத்தியம், இசை ஆடல் பாடல், ரஸக் கோட்பாடு. பார்ப்போர், கேட்போர் எனப் பற்பல விடயங்கள் நாடக வியலுடன் ஒப்பு நோக்கி எழுதப்பட்டுள்ளமை தெளிவாகின்றது.

''நாடகத் தொழிற்பாடுகள் பற்றிய நூல்களாக வெளிநாட்டில் வெளிவருகின்றன. தமிழில் இத்துறை இன்னும் வளரவில்லையென்றே கூறல் வேண்டும். நடிகர்களைப் பற்றிய தரவுகளை விவரணத் தொகுப்புகளாகத் தரும் வாழ்க்கை வரலாற்று நூல்கள் சில உள்ளன. அவையும் மிகச் சிலவே. நடிகர்களின் கலைத் தொழிற்பாட்டு நடவடிக்கைகளை மிக நுண்ணியதாக நோக்கும் ஆய்வுகள் இனித்தான் வர வேண்டும். அந்த ஒரு பெரு முயற்சியில் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளையின் இந்த நூல் ஒரு மைல்கல்லாக அமைகின்றது' என முன்னுரையிற் குறிப்பிட்டுள்ளார் முது தமிழ்ப் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள்.

இந்நூலின் பொருளடக்கம் திரை விலகுகிறது என்பதில் தொடங்கி 26 அம்சங்களை உள்ளடக்கி முடிகின்றது, 'பெரியவர்கள் பார்வையில் வைரமுத்து' என்ற பகுதியில் வைரமுத்துவின் நடிப்புக் கலையைப் பற்றி டி. கே. சண்முகம், யாழ்ப்பாண அரச அதிபராக இருந்த வேணன் அபயசேகரா, சிங்கள நாடகக் கலைஞர் ஹென்றி ஜெயசேன, ஈ. ஆர். சுரச்சந்திரா ம. ஸா சிவஞானம் என்போர் தெரிவித்த கருத்துக்கள் நமது நாட்டு நடிகமணியின் நடிப்பாற்றலை நாமறிந்து பாராட்டவைக்கின்றது.

இந் நூலில் நடிகமணி நடித்த காட்சிகளின் பல படங்கள் இணைக்கப்பட்டுள்ளன. நடிகமணியின் வளர்ப்புத் தந்தையும், ஞானகுருவுமாகிய வட அல்வை ஆசிரிய திலகம் க. முருகேசனார், பேராசிரியர் சு. வித்தியானந்தன் முதலியோரின் படங்களும் அழகுறக் காட்சி தருகின்றன. ஏ. ஜே. கனகரத்னா ஆங்கிலத்தில் வைரமுத்துவின் கலைத் தொண்டு பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூல் 170 பக்கங்களை உள்ளடக்கியுள்ளது. நடிகமணி பற்றிய படங்களும் பல இருக்கின்றன. இந்நூலுக்கு ரூபா 250 விலையா எனச் சிலர் எண்ணலாம். ஆனால் நம் நாடு தந்த நல்ல கலைஞர் ஒருவரின் வாழ்வும் அரங்கும் எமக்குக் கிடைத்த கலைப் பொக்கிஷம் என எண்ணுவோருக்கு இவ்விலை அதிகமாகத் தென்படமாட்டாது.

நாடகம், நடிப்பு, அவற்றுக்கு நமது நாட்டின் பங்களிப்பு, அக்கால நாடகக் கலைஞர்களின் திறமை, தனித்தன்மை என்பவற்றை காரை. செ. சுந்தரம்பிள்ளை மிக விளக்கமாகவும், தெளிவாகவும் தந்திருக்கும் இந் நூலை ஒரு நாவல் போன்றே

(7 ஆம் பக்கம் பார்க்க)

## நூல் வரிசை

நூல்: ''நடிகமணி வி. வி. வைரமுத்து வாழ்வும் அரங்கும்''
ஆசிரியர்:
காரை செ. சுந்தரம்பிள்ளை

# விவசாய போதனாசிரியருக்கு ஐந்து நாள் விசேட பயிற்சி

வடமராட்சி, செப். 21

யாழ். மாவட்டத்திலுள்ள கமநல கேந்திர நிலையங்களில் பணியாற்றும் விவசாயப் போதனாசிரியர்களுக்கு ஐந்து நாள் பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது.

சர்வதேச கெயர் நிறுவனமும் விவசாயத் திணைக்களமும் இணைந்து நடத்தும் இப்பயிற்சி வகுப்பு அடுத்த மாதம் 6ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

விவசாயத்துறை சார்ந்த அறிஞர்களால் புதிய விவசாய தொழில்நுட்ப அறிமுகம், விவசாய விருத்தி போன்ற விடயங்களில் விரிவுரைகள் வழங்கப்படும் என சர்வதேச கெயர் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-173)

# மகாசங்கத்தின்....

(மூன்றாம் பக்கத் தொடர்)

வோம். இல்லையேல் சிங்களவர்களாகிய எமக்கு நாடு இல்லாமற் போய் விடும்.

இனத்தையும், மதத்தையும் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு சிங்கள மக்களை அழிக்கப்பார்க்கிறார்கள், அதனைத் தடுக்கவே இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டது — என்றார்.

## 56 ஆம் ஆண்டிலும் இது நடந்தது

ஆணைக்குழுவின் செயலாளர் பத்மசாந்த விக்கிரமசூரிய பேசுகையில் கூறியதாவது:-

''சிங்கள மக்கள் கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள் என்று தவறான முறையில் பிரசாரம் செய்யப்படுகின்றது. நாம் எமது இனத்தின் உரிமைகளையும், மதத்தின் குறிக்கோள்களையுமே வலியுறுத்துகின்றோம்.

''1956 ஆம் ஆண்டு இது போன்ற ஒரு கூட்டம் கொழும்பு ஆனந்தாக்கல்லூரியில் கூட்டப்பட்டது. அக்கூட்டத்திலும் பல பௌத்தமத குருமார்கள் பங்குபற்றினர்.

''அன்றும் பௌத்த மக்களின் குறைபாடுகளை ஆராய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையை அப்போதைய பிரதமர்எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க கையேற்றார். துரதிர்ஷ்ட வசமாக பின்னர் அவரைச் சுட்டுக் கொன்று விட்டனர்.

''அந்த அறிக்கை இதுவரை நடைமுறைப்படுத்தப் படவில்லை, அதே போலவே இந்த அறிக்கையும் இருக்கக் கூடாது. ஜனாதிபதியும் பண்டாரநாயக்க பரம்பரையைச் சேர்ந்தவர், எனவே அவரும் இதனை உதாசீனம் செய்யக் கூடாது.''

(ஐ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

122/14, கன்னாதிட்டி வீதி, காளிகோயில் ஒழுங்கை 1 பரப்பு 1.8 குழி வீட்டுடன் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- திரு.V.செல்வகணேஸ்,78/9, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (49757)

2 வயது நிரம்பிய ஆட்டுக்கடா விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-குழந்தை கணேசலிங்கம், கோண்டாவில் வடக்கு மத்திய கிராம அபிவிருத்தி முன்னேற்றச் சங்க விளையாட்டு மைதான ஒழுங்கை, கோண்டாவில். (49746)

### உடன் விற்பனைக்கு

பல இன கலர் வளர்ப்பு மீன் குஞ்சுகள், கோல்பிஸ், ஏஞ்சல், சலிக்கோ மற்றும் பலவகை உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; ம. மோகனபிரகாஸ் 'மல்லிகாபதி'' சந்தைகிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [49733]

### தவறிவிட்டது

உரும்பிராய் மேற்கு பிருந்தா பரமலிங்கம் என்பவரது விசேட பாடசாலை அடையாள அட்டைகள் ஈசன் ரியூசன் சென்ருக்கும் உடுவிலுக்கும் இடையில் 12, 09.97 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வே. பரமலிங்கம், உத்தரவு பெற்ற நிலஅளவையாளர்,''கலைமகள் வாசா' உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (49737)

### தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசங்களில் முற்பணம் இல்லாமல் வாடகைக்கு வீடு தேவை. நேரில்/கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். T.கணேசன், இல. 42,5 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (49735)

### மணமகள் தேவை

32 வயது ஆசிரியருக்கும், 34 வயது ஆசிரியருக்கும் மணமகள் தேவை. அம்பாள் திருமண சேவை, ஸ்ரீ லங்கா அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். (49752)

## ஆலயத்துக்கு புதியதேர்

தம்பசிட்டி மாயக்கைப் பிள்ளையார் கோயிலுக்கு புதிய சித்திரத்தேர் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது. (ஐ-173)

## நெல்லியடி ஐயனார் தேவஸ்தானம்
## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பிற்போடுதல்

மேற்படி ஆலய திருப்பணி வேலையை முன்னிட்டு **25 - 08 - 1997** அன்று நிகழவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களினால் **14 - 11 - 1997** வெள்ளிக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

**- நிர்வாகிகள்**
நெல்லியடி ஐயனார் தேவஸ்தானம்.

(சி/1602)

## CASIO INSTITUTE
**KALVIYANKADU**

- **SPOKEN ENGLISH - BRITTO**
- ஆண்டு 6 முதல் **O/L, A/L,** வரை
- **O/L, A/L Day Classes**
- முன்மாதிரிப் பரீட்சைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அனுமதிகளைப்பெற்றுக்கொள்ளுங்கள்

**நிர்வாகி,**
**அ ராகவன்.**

(49742)

## சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

### அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்க பொன்விழா

தொடர்பான சீட்டிழுப்பு 27 - 08 - 97 இல் நடைபெறவில்லை எனவும், அது **29—10—97** இல் நடைபெறும் எனவும் அறியத்தருகின்றோம். சீட்டிழுப்பு முடிவு பத்திரிகையில் வெளியிடப்படும்.

**அ. துரைசிங்கம்**
**இணைப்பாளர்.**

(49731)

## கண்ணீர் அஞ்சலி

தேவரையாளி செல்லமாலையைப் பிறப்பிடமாகவும், கொற்றாவத்தை மலையந்தோட்டத்தை வதிவிடமாகவும் கொண்ட

**உயர்திரு ஆறுமுகம் தம்பையா** (B.Sc.)
(முன்னாள் உப அதிபர்
யா/தேவரையாளி இந்துக் கல்லூரி கரவெட்டி)

அவர்கள் 14.09.97 அன்று கொழும்பில் இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும், இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தேவரையாளி நரசிம்மர் கதிர்காம ஆலய பரிபாலன சபை,
தேவரையாளி சனசமூக நிலையம்,
தேவரையாளி பாலர் பாடசாலை,
தேவரையாளி யங் லயன்ஸ் விளையாட்டுக் கழகம்,
தேவரையாளி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம்.

(49732)

## தேவை

**தாமோதரா விலாஸ்** மீண்டும் இயங்கவிருப்பதால் சைவ ஹோட்டல் அனுபவமுள்ள வேலை ஆள்கள் தேவை. **28 - 09 - 97**-க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

இல. 61A, அரசடி வீதி, வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.
(49724)

## அன்பே சிவம் !!

சிவம் அன்பே எனப் பின்பற்றுபவர்கள் சைவ சமயத்தவர்கள். இலங்கைத் தமிழர்களுள் பெரும்பான்மையினர்கள் வணங்கும் தெய்வம் சிவனே. இந்தியாவில் முதன்மையானதும், உலகில் மிகப் பழைமையானதும் சிவ வழிபாடேயாகும்.

காலா காலத்தில் இந்தியா, இலங்கையில் நடைபெற்ற குடியேற்றங்கள், படையெடுப்புகள், ஆதிக்க விஸ்தரிப்புகள் என்பவற்றினால், மொழிகளும் மாற்றமடைந்து, புதிய வழிபாடுகளும் உருவாகின, முன்னைய வழிபாடுகளும் மாற்றமடைந்தன. இந்தியா, இலங்கையில் பல வழிபாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு, ''இந்து சமயம்'' என்ற சொல்லும் உருவாக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. ''இந்து சமயம்'' என்பதற்கு எந்தவித கருத்தும் இல்லை, தத்துவமும் இல்லை. தனிப்பட்ட கிரிகைகளும் இல்லை. ஆனால், வைதீகம், வைஷ்ணவம் என்பவைகள் தனிப்பிரிவுகளாகவுள்ளன.

சிவனை வழிபட்ட சைவ சமயத்தவர்கள், தம்மைப் பரந்த நோக்குடையவர்கள் எனக் கருதி, மழை விட்டும் தூவானம் ஒழியவில்லை என்பதைப் போல், தமது மயக்க நிலையிலிருந்து முற்றிலும் விடுபட முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர். இன்றைய யாழ்ப்பாண நிலையில், சைவ சமயம் பிரபஞ்ச மயப்படுத்தப்பட, தமிழ் மொழி ஒலி கேளாது, பிற மொழியான சமஸ்கிருதம் ஊர்களெங்கும் கேட்க வைத்து வருகின்றனர். சிவனுக்கான ''பூசைகள்'' சிவனை வணங்காத வைதீக சமய, வைஷ்ணவ சமயக் குருக்கள் மாரைக் கொண்டு பக்தியுடன் செய்கின்றனர்.

இன்றைய இலங்கைத் தமிழரின் சைவத்தைப் பிரபஞ்ச மயமாக்கும் போக்கு தீவிரமாக விஸ்தரிக்கப்பட முயற்சிகள் எடுக்கப்படாதே காணப்படுகிறது. சமஸ்கிருத மொழியுடன், பாளி, இலத்தீன், அரபு ஹூபுறு மற்றும் ''கடவுள் மொழிகள்'' சைவக் கோயில்களிலிருந்து ஊர்களெல்லாம் ஒலிக்க வைக்கச் செயற்படும் அமைப்புகள் தொடர்ந்தும் உருவாக்கப்பட வேண்டியுள்ளன. ''இந்து'' மாமன்றங்களுடன், திராவிட - ஆரிய சங்கம்; திராவிட-பௌத்த சங்கம்; திராவிட இசுலாமிய சங்கம்; திராவிட - யூத சங்கம், ... எனப் பலவித சங்கங்கள், மாமன்றங்கள் தோன்றுமானால், பல் ''இன'', மத மொழிகளூடாக, சைவக் கோயில்கள் சிவனையும, சைவத்தையும் பிரபஞ்ச மயப்படுத்தி, மிகவும் குறுகிய காலத்தில் சிவன் இப்பிரபஞ்சத்தில் ''சிவ தாண்டவத்தை'' நிகழ்த்தி, அனைவரும் ''முத்திநிலை'' பெற வழிவகுக்கப்படும்.

ஜே! பஜன், ஓ! யோயுபி ஜி!


- யேப யோபி

உங்கள் அபிப்பிராயங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
விலாசம்: விளம்பர இல: **653**
**உதயன் பணிமனை**
**யாழ்ப்பாணம்.**

[சி/1601]

உ

## புதுவையூர் அருள்மிகு மஞ்சள் உனா
## ஸ்ரீ நகுலஞானவைரவப் பெருமான் தேவஸ்தானம்
## அலங்கார உற்சவப் பெருவிழாத் திருமுகம்



| | | |
|---|---|---|
| ஆரம்பம் 21 — 09 — 1997 | காலை 10:00 மணி | சங்காபிஷேகம் |
| | மாலை 5 - 00 மணி | சுவாமி வீதி வலம் வருதல் |
| 28 — 09 — 1997 | மாலை 5 – 00 மணி | வேட்டைத் திருவிழா |
| 29 — 09 — 1997 | மாலை 5 - 00 மணி | சப்பறத் திருவிழா |
| 30 — 09 — 1997 | காலை 10 - 00 மணி | தேர்த்திருவிழா |
| 31 — 09 — 1997 | காலை 1008 சங்காபிஷேகம் 10-00 மணிக்கு தீர்த்தத் திருவிழா புனிதகங்கை நிலாவரையில் | |

**உற்சவகுரு தி. கெங்காதரக் குருக்கள்,**
**புன்னாலைக்கட்டுவன்.**

(49734)

## யாழ். மத்திய கல்லூரி
### பழைய மாணவர் சங்கம்

## 181 ஆவது ஆண்டு நிறைவு விழா மலர், முதல் நாள் உறை

யாழ். மத்திய கல்லூரியின் **181** ஆவது ஆண்டு நிறைவு விழா மலரும், முதல் நாள் உறையும் சொற்பஅளவு விற்பனைக்கு உண்டு. பிரதிகளை கல்லூரியின் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நினைவு மலர் ரூ. **150/-**
முதல் நாள் உறை **50/-**

அதிபர்,
**யாழ். மத்திய கல்லூரி.**

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யாழ். மத்திய கல்லூரி.

(சி/1595)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மனித நேயம் துளிர்க்குமா?

வெள்ளிக்கிழமை இந்துக்களின் விசேட புனித நாள். நல்லூர் முருகன் ஆலயம் குடாநாட்டின் பிரதான ஆலயங்களில் ஒன்று. அங்கிருந்து அருள்மழை பொழியும் கந்தக் கடவுளைத் தங்களுக்குள்ள துன்ப துயரங்களை நீக்கிக் கருணை காட்டுமாறு, இரந்து இறைஞ்சுவோர் பலர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நல்லூரான் சந்நிதியில் ஐந்நூறுக்கும் மேலான மக்கள் குழுமினர். அங்கே உள்ள வேப்பமர நிழலில் அமர்ந்து அமைதியாக உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர். காலை முதல் மாலை வரை தேவார, திருவாசகம் பாடிக்கொண்டு, பிரார்த்தனை செய்து கொண்டு இருந்தனர்.

அவர்களில் மிகப் பலர் பெண்கள். வயதான தாய்மார்கள், இளம் குடும்பப் பெண்கள், யுவதிகள் என்று சோகமே உருவெடுத்து, உயிர் போன ஊன் நடமாடுவது போன்று உளம் மங்கி, தென்பின்றி வதங்கிய வதனங்களுடன் சோகம் ததும்பக் காணப்பட்டனர்.

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த தமது அருமைப் புதல்வர்கள், தங்கள் வாழ்க்கையின் பற்றுக்கோடுகளாக, கொழு கொம்புகளாக விளங்கும் ஆருயிர் கணவர்கள், தமது குடும்பங்களின் வாழ்க்கைச் சுமைகளை ஏற்றுத் தங்களுக்கு வாழ்வு தேடித் தரவிருந்த பாச மிகு சகோதரர்களைக் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாகக் காணாது தவிப்பவர்களே அவர்கள்.

வயலுக்குப் போனவர்கள், அலுவலகத்துக்குச் சென்றவர்கள், பாடசாலைகளுக்குப்போனவர்கள், நகையோடு சென்றவர்கள், பணத்தோடு போனவர்கள் மாதங்கள் பல கடந்தும் வீடு திரும்பவே இல்லை. வீடுகளில் இருந்து கூட்டிச் செல்லப்பட்டவர்களும் திரும்பி வரவேயில்லை.

அவர்களுக்கு என்னாயிற்று, எங்குற்றார்கள், ஏதானார்கள் என்ற அணுவளவு தகவலும் தெரியாமல் தவியாய்த் தவிப்பவர்களே முருகன் ஆலய முன்றலில் உணவின்றி உண்ணாவிரதமிருந்தனர்.

கைதாகிக் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம், அன்னையர் முன்னணி என்ற அமைப்புகளை உருவாக்கி தமது பிள்ளைகளுக்கு, கணவன்மாருக்கு, சகோதரர்களுக்கு என்ன நடந்தது என்று அறிய முயன்றனர். அதிகாரிகளைச் சந்தித்தனர். மகஜர்கள் கொடுத்தனர். எதனாலும் பயன் கிடைக்கவில்லை.

காணாமற்போன தமது இரத்தத்தின் இரத்தங்களுடன் கடித மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் பெறத் தானும் அவர்களுக்கு எவரும் உதவவில்லை; உதவ முடியவில்லை!

பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக் குழு இராணுவ — பொலீஸ் விசாரணைக் குழு ஆகியன பெற்றோர், மனைவிமார், பாதுகாவலர்களை அழைத்து விசாரணைகளை நடத்தின. விவரங்களைக் கேட்டறிந்தன. ஆனால் காணாமற்போன தமது உறவுகள் குறித்து எவ்வித தகவலும் சம்பந்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்கவில்லை.

ஜனாதிபதியைச் சந்திக்க முயன்றார்கள்; இயலவில்லை.

அதற்கு மேல் என்ன செய்ய முடியும்...?

உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தார்கள். தமது துயரநிலை குறித்து அதிகாரிகளின், அரசாங்கத்தினரின் கவனத்தை ஈர்க்கும் சாத்வீக முயற்சி இது.

எதையாவது செய்து தொலைக்கட்டும் என்ற போக்கே தொடருமா? அல்லது மனிதநேயம் துளிர்க்குமா?

பொறுத்திருந்துதான்பார்க்க வேண்டுமோ...!

# கடந்த சில மாதங்களில் பெருமளவு பணம் பாதுகாப்புக்குச் செலவு!

## இத்தகைய நிலை மீண்டும் வேண்டாம் என்கிறார் அனுருத்த

கொழும்பு, செப். 21

கடந்த சில மாதங்களில் பாதுகாப்புக்கென அரசாங்கம் 4 ஆயிரத்து 400 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை செலவிட வேண்டியிருந்தது. தேசிய வளங்களைப் பாதுகாக்கும் முகமாக இத்தகைய யுத்த நிலைமை மீண்டும் தோன்றுவது தடுக்கப்பட வேண்டும்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் படையினர் ஏற்கனவே வடபகுதியில் 4 ஆயிரத்து 400 சதுரகிலோ மீற்றருக்கும் அதிகமான பகுதிகளை விடுவித்துள்ளனர் கூடிய விரைவில் வவுனியா —கிளிநொச்சி வீதி விடுதலைப் புலிகள் பிடியிலிருந்து விடுவிக்கப்படும்.

அடுத்த இரு மாதங்களில் வடக்கிலும் தெற்கிலுமுள்ள மக்களுக்கிடையில் சமாதானமும் ஒற்றுமையும் நிலை நாட்டப்படும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அரசின் அரசியல் தீர்வு யோசனைகளை சில பிரிவினர் எதிர்க்கின்றனர்.

ஆனால் அவர்களின் பிள்ளைகள் போர் முனைக்குச் செல்வதில்லை. எல்லைப்புறங்களிலுள்ளவறியபெற்றோரின் பிள்ளைகளே நாட்டைப் பாதுகாப்பதற்காக உயிர்த் தியாகம் செய்கின்றார்கள்—

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

வட பகுதி யுத்தத்தைப் பார்ப்பதற்கு தம்முடன்போர் முனைக்கு வரும்படி கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறைகளில் வாழ்ந்து வருபவர்களுக்கு தாம் பகிரங்க அழைப்பு விடுவதாகவும் அமைச்சர் சொன்னார்.

(இ-9)

## லயன்ஸ் கழக இரத்த அழுத்த மற்றும் கண் பரிசோதனைகள்

யாழ்ப்பாணம், செப். 21

மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்படும் கண் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை என்பவை இன்று காலை 9.30மணிக்கு மானிப்பாய்—யாழ். வீதி ஆலடிச் சந்தியில் உள்ள கழக செயலகத்தில் இடம்பெறும்.

இன்று மாலை 3.30 மணி அளவில் இடம்பெறும் கழகக் கூட்டத்தில் வைத்து கண் பார்வை குறைந்தவர்களுக்கு இலவசமாக கண்ணாடி வழங்கும் வைபவமும் இடம் பெறும்.

மேலும் டென்மார்க் யூலன்ட் தமிழ் இசைக் கலாசார ஒன்றியம் லயன்ஸ் கழக செயற்பாடுகளுக்கென வழங்கிய 71 ஆயிரத்து 266 ரூபாவும், கனடாவில் வதியும் சுதுமலை வடக்கைச் சேர்ந்த மூன்று நலன் விரும்பிகள் வழங்கிய 300 கனடிய டொலர்களும் பொருளாளர் எஸ். சிறினிவாசனிடம் ஒப்படைக்கப்படும்.

இக் கூட்டம் கழகத் தலைவர் செ. ஞானராசா தலைமையில் நடைபெறும். மாவட்ட வலையத் தலைவர் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (இ-9)

## வெற்றிலை விலை வீழ்ச்சி

சாவகச்சேரி, செப். 21

சாவகச்சேரி பொதுச்சந்தையில் வெற்றிலை விலை வீழ்ச்சி கண்டுள்ளது. வெற்றிலை ஒன்று ஒரு ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

தேங்காயின் விலை அதிகரித்துள்ளது. தேங்காய் ஒன்று 7 ரூபாவுக்கு விற்கப்படுகிறது.

இதேவேளை கோழி முட்டை 5 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. பழ வகைகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

(இ-31)

## விவசாயிகளுங்கு போரூட் கடன்

திருநெல்வேலி, செப். 21

300 விவசாயிகளுங்கு காலபோக நெற் செய்கைக்கு கடனாக தலா 3 ஆயிரத்து 500 ரூபாவை வழங்குவதற்கு போரூட் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வசதி குறைந்த விவசாயிகளுக்கே இக் கடன் வழங்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஊடாக இந்தக் கடன் வழங்கப்படும்.

(இ-135)

# இறையன்பில் நிலைத்திருந்து அன்புறவில் வாழ்ந்திடுவோம்

இம்மண்ணக வாழ்வுதன்னில் மனிதர்களாக நடமாடும் நாமனைவரும் இறைவனின் அளப்பரிய, அளவிடமுடியாத எல்லையற்ற அன்பின் அதியுன்னத வெளிப்பாடாக விளங்குகின்றோம்.

நாம் எவருமே எமது ஊனக் கண்களினால் கடவுளைக் கண்டதுமில்லை; பார்த்ததுமில்லை. ஆனால் அவரது அதிசயிக்க வைக்கும் படைப்பினை, ஆழ்ந்த முறையில் பார்க்கும் பொழுது, நுண்ணறியும் பொழுது, அங்கு அவரை எமது அகக்கண்களினால் பார்க்கின்றோம். அவரது மாண்பினை, மகத்துவத்தினை, கருணையினை, பராமரிக்கும், பாதுகாக்கும், வழிநடத்தும், விருத்தியாக்கும் உன்னத வல்லமையினை, எம்மேல் கொண்டுள்ள அளவிடமுடியாத அன்பினை, அறிகின்றோம்; உணர்கின்றோம்; அனுபவிக்கின்றோம்.

இப்படியாக இறைவனின் அன்பினை அறிந்து, அனுபவித்து வரும் நாம் அனைவரும் எமது வாழ்க்கையில் இவ்வன்பின் நிலைப்பாட்டை, தராதரத்தை, சிறப்பை சிந்திக்க அழைக்கப்படுகின்றோம். நாம் எம் சகோதரர்களோடு கொண்டுள்ள உறவின் தன்மையை உணர வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

எமது நாளாந்த வாழ்க்கை வட்டத்துக்குள் வலம் வருகின்ற வேளையில், எமது வாழ்வை சற்றுப் பின்னோக்கிப் பார்க்க அழைக்கப்படுகின்றோம். நான் என்னை அன்பு செய்து ஏற்றுக்கொள்கின்றேனா? நான் என்னை நானாக, இறையன்பின் ஓர் உன்னத கொடையாக, எனது நிறைகள், குறைகள், பலங்கள், பலவீனங்கள், ஆற்றல்கள், ஆற்றாமைகள் இவையனைத்துடனும் என்னை ஏற்று அன்பு செய்து வாழ்கின்றேனா? எனது உடல், உள, ஆன்மீக தேவைகளைப்பூர்த்தி செய்ய விழைகின்றேனா? இதன் வழியாக ஒரு முழு மனித வளர்ச்சியை நோக்கி எனதுவாழ்வு நடைபயில்கின்றதா?

இறைமகன் கிறிஸ்து கூறுகின்றார்: ''உன்னைப்போல் உன் அயலானையும் நேசிப்பாயாக'' என்று. அவர் உன் அயலாரை நேசிப்பாயாக என்று மட்டும் கூறவில்லை, ''நீ உன்னை நேசிப்பது

### ஞாயிறு நற்பிரசாதம்

போல், அன்பு செய்வது போல், உன் அயலானையும் அன்பு செய்வாயாக'' என்கின்றார். இங்கு தன்னைத் தானே அன்பு செய்வதன் முக்கியத்துவம் வெளிப்படுகின்றது. "என்னை நானாக அன்பு செய்யாவிடில், எவ்வாறு என் அயலவனை, அவனது குறையிலும் நிறையிலும் பலத்திலும் பலவீனத்திலும் அன்பு செய்து ஏற்க முற்படுவேன்? தன்னைத்தானே அன்பு செய்து ஏற்று வாழ முடியாதவன், அயலவனை, கடவுளை அன்பு செய்கின்றேன் என்று கூறும்பொழுது தன்னையே பொய்யனாக்குகின்றான்.

எமது வார்த்தை — வாழ்வாக, வாழ்வு—வழிபாடாக, வழிபாடு — வாழ்வாக, வாழ்வு — வார்த்தையாக மாறாவிட்டால், நாங்கள் புது மாற்றத்தை, மறுமலர்ச்சியை, சமாதானத்தை இம் மண்ணகத்தில் அனுபவிக்க முடியாது,

போர் மேகங்கள்— எம்மைச் சூழ்ந்து காரிருள் கௌவிட; உயிரிழப்புகள், உடைமையழிப்புக்கள். இடம் விட்டு இடம்மாறும் அகதிகளாக நாம் நிற்க, எம் சொந்த மண் இரத்தக் களரியாக மாறிட; சோககீதங்கள், பிரிவின் கொடுமைகள், வறுமையின் கோடுகள் எதிர்கால வாழ்வு எண்ணற்ற கேள்விக் குறிகளில் தாண்டவமாடிட; மனங்கள் வெறும் வெற்றிடமாக மாறி மௌன கீதங்கள் இசைத்திட; இவ்வளவில்லா துன்பங்கள் மத்தியிலும் எமது மனங்களில் மாற்றங்கள் ஏற்பட்டனவா? உறவுகளில் புதுமலர்வு பிறந்ததா? அன்றாடச்செயல்களில் அன்பின் வெளிப்பாடு, அதன் சிறப்பு மிளிர்ந்ததா? எம்மத்தியில் ஆழமான அன்புறவு நிலவியதா? அங்கு இறைவனைக் கண்டோமா?

ஆண்டவனில் நிலைத்திருக்க அன்புறவு தேவைப்படுகின்றது. அன்புறவில் நிலைத்திருக்க மனங்களில் உள்ளங்களில் மாற்றங்கள் தேவைப்படுகின்றன. மாற்றங்களை எதிர்கொள்ள தடைக்கற்களாக இருக்கும் எத்தனையோ தீய சக்திகளை வெல்ல வேண்டியிருக்கின்றது. இவற்றிலிருந்து விடுதலை பெற இறைபருள் இறையன்பு தேவைப்படுகிறது. இறையன்பில் நிலைத்திருக்க அன்புறவு மிளிர்கின்றது.

—அருட்செல்வி.
லொறன்சியா லோலன்ஸ்
(தி.சி)

## செயல் அமர்வில் கலந்து கொள்ள தவறினர்

யாழ்ப்பாணம், செப். 21

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தொலைக்கல்வி போதனாசிரியர்கள் தொழில் சார் செயல் அமர்வில் கலந்து கொள்ள முடியவில்லை.

செயல் அமர்வு தொடர்பான அறிவித்தல் கடிதம் உரிய நேரத்தில் கிடைக்காததே இதற்குக் காரணம் ஆகும்.

தேசிய கல்வி நிறுவகம் ஆரம்பிக்க உள்ள ''ஆசிரியர் தொடர் கல்வி பாடநெறி'' போதனாசிரியர்களின் தொழில் சார் செயல் அமர்வு மாரகம மீப்பையில் இம் மாதம் 11ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதிவரை நான்கு தினங்கள் நடைபெற்றது.

இதில் கலந்து கொள்ள மகரகம தேசிய கல்வி நிறுவகம் அனுப்பி வைத்த கடிதங்கள் 10ஆம் 11ஆம் திகதிகளிலேயே கிடைத்தன. இதனால் யாழ். மாவட்ட போதனாசிரியர்கள் பலர் செயல் அமர்வில் கலந்து கொள்ள முடியவில்லை எனக் கூறப்படுகின்றது. (இ-11)

## மக்கள் முகம்

கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய இலக்கிய வித்தகர் த. துரைசிங்கம் இம் மாதம் 4 ஆந் திகதி முதல் தனது 38 வருட காலக் கல்விப் பணியினின்றும் ஓய்வு பெற்றுள்ளார்.

ஆசிரியராக அதிபராக, கொத்தணி அதிபராக கோட்டக்கல்வி அலுவலராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக, கல்விப்பணிப்பாளராக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சேவையாற்றிய துரைசிங்கம் இதுவரை அறுபதுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். இவற்றுள் பதினான்கு நூல்கள் சிறுவர் இலக்கியம் சார்ந்தவையாகும். இவரது 'பாலர் பாட்டு' என்ற நூல் இலங்கை இலக்கியப் பேரவையின் முதற் பரிசைப் பெற்றது. 'குழந்தைப் பாடல்கள்' என்னும் நூல் தேசிய சாகித்திய விருதினைப் பெற்றது. இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சு இவருக்கு 'இலக்கிய வித்தகர்' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின்சமாசம், யாழ். மாவட்ட புற்றுநோய் நிவாரண சங்கம், வட இலங்கைக் கிராமியக்கலைக்கழகம் ஆகியவற்றின் செயலாளராகப் பல்லாண்டு காலம் பணியாற்றிய இவர் தற்போது வடபிரதேச இந்து இளைஞர் பேரவையின் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

(ஐ)

## கலைஞனின்...

[5 ஆம் பக்கத் தொடர்]

படித்து முடிக்கலாம். காரை செ. சுந்தரம்பிள்ளை கவிதையுடன் உரைநடையும் கைவரப்பெற்றவரென்பதற்கு இந்நூல் கட்டியம் கூறி நிற்கின்றது,

- புத்தொளி.

### நாளை புரட்டாதி 6

திங்கட்கிழமை
திதி: ஷஷ்டி
பிற்பகல் 1.43 வரை.
நட்சத்திரம்: ரோகிணி
பின் இரவு 12 47 வரை
சுபநேரம்: 12 02 1 32
ராகுகாலம்: 7 32 9 02
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## யோசவ் புஞ்சிபண்டா விக்கிரமசிங்க

(இளைப்பாறிய பொலிஸ் -சார்ஜன்ட்)

திரு, யோசவ் புஞ்சிபண்டா விக்கிரமசிங்க 05-09-97 வெள்ளிக்கிழமை கண்டியில் காலமானார். இவர் திருமதி லில்லி றெஜினா (அரசினர் வைத்திய சாலை, கண்டி)வின் அன்புக் கணவரும், ஆன்றசீக்கா, ஐறின்ஷிராணி, டொன்றொசானி, லீனஸ் அஜித்தின் தந்தையும் திரு கனோலின் (கனடா) மாமனாரும் காலஞ் சென்ற திரு. திருமதி டானியல் அடைக்கலத்தின் மருமகனும், திரு எம். டி. யேசுதாசன் (பொறியியலாளர்), காலஞ்சென்ற இம்மானுவேல் (நோர்லி என்ரபிறைசஸ்), அல்பேட் தம்பிநாயகம் (ஆசிரியர்),ஞானப்பிரகாசம், காலஞ்சென்ற பிரான்சிஸ் சேவியர், திருமதி பி. எவ். சின்னத்துரை (அதிபர், புனித சாள்ஸ் ம. வி.) திருமதி திரேசா (துல்கிரியா) வின் மைத்துனரும்ஆவார்.

இவரின் நல்லடக்கம் 08-09-97 இல் கண்டி மகியாவ மயானத்தில் நடைபெற்றது.

இதனை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பி. எவ். சின்னத்துரை
(மைத்துனி)
36, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்.
(49762)

## கந்தர் ரவிச்சந்திரன்

திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தர் ரவிச்சந்திரன் 19-09-97இல் காலமானார்.

இவர் கந்தர் பொன்னம்மா தம்பதிகளின் மகனும், யோகேஸ்வரன், மகேந்திரராஜா, நல்லதம்பி, கமலா, வசந்தாதேவி, காலஞ்சென்ற சண்முகம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று நாளை (22-09-97) திங்கட்கிழமை பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. யோகேஸ்வரன்
(சகோதரன்)
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.
(49770)

## திருமதி பாக்கியசவுந்தரி செபஸ்ரியான்

கற்கோவளத்தைச் சேர்ந்த திருமதி பாக்கியசவுந்தரி செபஸ்ரியான் 18-09-97 அன்று வவுனியாவில் காலமானார்.

இவர் அன்ரன் செபஸ்ரியான் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. சிவசம்பு—திருமதி கனகம்மா சிவசம்பு ஆகியோரின் அன்பு மகளும்,பாக்கியசோதி, பாக்கியநேசர், பாக்கியரட்ணம், பாக்கியராஜன், காலஞ்சென்ற திருமதி பாக்கியதேவி யேசுதாசன், பாக்கியமணி ஆகியோரின் சகோதரியும், ரஜீவ் ஜெகநாதனின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் வவுனியாவில் 19-09-97 அன்று நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.பாக்கியராஜன்
(சகோதரர்)
சக்தி மெடிக்கல்ஸ்,
புலோலி.
(49761)

## சின்னத்தம்பி குணரட்ணம்

(முன்னாள் லிகிதர், சாமுவேல் அன்சன்ஸ், கொழும்பு)

உடுப்பிட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி குணரட்ணம் அவர்கள் 08 - 09 - 97 இல் காலமாகிவிட்டார்.

இவர் பூரணம் அவர்களின் அன்புக் கணவரும், திருமதி ஜெ. ஜெகதீஸ்வரி (ஜேர்மனி), திருமதி ப. பூரணகுணரேவதி, திரு. கு. குகதாசன் (கனடா), திரு. கு. மகேந்திரதாஸ் (கனடா), செல்வி கு. சறோஜினிதேவி (ஆசிரியை, சென்தோமஸ் கொன்வென்ற், மாத்தளை), திருமதி பா. சகுந்தலாதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரு. க. ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), திரு. பொ. பத்மநாதன் (நல்லூர் ப. நோ. கூ. சங்கம்), திருமதி கு. றாஜினி (கனடா), திருமதி ம. றஜனி (கனடா), திரு. மு. பாஸ்கரநாதன் (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திரு. சி. அழகரத்தினம், காலஞ்சென்ற திருமதி எ. தங்கரத்தினம், காலஞ்சென்ற திருமதி வை. றோசம்மா, திருமதி த. ஞானரத்தினம், திருமதி வே. சற்குணபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வன் ஜெ. புவனராஜ் (ஜேர்மனி), செல்வி ஜெ. கீத்தா (சென். தோமஸ் கொன்வென்ற், மாத்தளை), செல்வி ஜெ. தேவ விஜித்தா (ஜேர்மனி), செல்வி ஜெ. தேவ ஜெசித்தா (ஜேர்மனி), செல்வன் ப. பஹீர் (யாழ். இந்துக் கல்லூரி), செல்வன் ப. அகில், செல்வி ப. கிருபா (யாழ். திருநெல்வேலி இ. த. க. பாடசாலை), செல்வன் ம. தீபன் (கனடா), செல்வன் ம. ஸ்ரீபன் (கனடா), செல்வி பா. அனுஜனா (கனடா), செல்வன் பா. தர்ஷன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21 - 09 - 1997 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11. 30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. பொ. பத்மநாதன்
(மருமகன்)
''குணபூரண வாசா''
உடுப்பிட்டி.
(49754)

## விசேட அ.அட்டை

நெடுந்தீவு, செப். 21

வேலணை உதவி அரசாங்க அதிபர் பகுதியில் மண்டைதீவு, அல்லைப்பிட்டி கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அப்பகுதியில் உள்ள இராணுவ முகாமிற்கு அருகாமையிலும்—

கிராம அலுவலர் இல. ஜே/11 தொடக்கம் ஜே/21 வரையிலான பிரிவுகளில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும் வைத்து வழங்கப்படும்.

## திருத்த வேலை

நெல்லியடி, செப். 21

வல்லை வீதியில் பழுதடைந்திருந்த பாலங்களில் ஒன்றைத் திருத்த வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்து வருகிறது. (இ 109)

## ஆய்வுகூட...

(முதலாம் பக்கத் தொடர்)

அமைந்துள்ள பிரேத அறையிலிருந்து துர்நாற்றம் வீசுவதால் ஆய்வுகூடப் பகுதியில் இருந்து பிரேத அறையை மாற்றியமைக்க வேண்டும் அல்லது துர்நாற்றம் எழாத வகையில் குளிர்சாதன இயந்திரங்கள் திருத்தியமைக்கப் பட்டுத் தகுந்த முறையில் பராமரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தே தொழில்நுட்பவியலாளர்கள் வேலை செய்ய மறுத்ததாகத் தெரியவருகின்றது.

பிரேத அறையில் இருக்கும் சடலங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கப் பாவிக்கப்படும் — குளிர்சாதனக் கருவிகள் பழுதடைந்து மூன்று வாரங்கள் ஆகியும் திருத்தப்படாததாலேயே அங்கு வைக்கப்பட்டிருந்த சடலங்கள் பழுதடைந்து துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆய்வுகூடம் இயங்காமையால் பல வார்ட்டுக்களில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களதும் சிகிச்சைக்காக வந்திருந்த நோயாளர்களதும் நோய்க் காரணிகளை கண்டறிய மேற்கொள்ளப்படும் பலவித பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் —

வார்ட்டுக்களில் இருந்து பரிசோதனைக்காக அனுப்பி வைக்ப்பட்ட பரிசோதனை பொருள்கள் அந்தந்த வார்ட்டுகளுக்கே திருப்பி அனுப்பப்பட்டன என்றும் — கூறப்பட்டது.

வெளிநோயாளர் பகுதியில் இயங்குகின்ற ஆய்வுகூடம் மாத்திரமே நேற்று இயங்கியது.

இதேவேளை— சிற்றூழியர்களுக்கும் நோயாளர்களுக்கும் உணவு தயாரிக்கின்ற சமையல் அறையும் பிரேத அறைக்குஅருகிலேயே அமைந்திருப்பதால் கடமை புரியும் ஊழியர்கள் மூக்கைப் பிடித்தவாறே பணியாற்ற வேண்டியுள்ளதாகவும் —

இதனால், சமையலறைப் பகுதியில் உணவை உட்கொள்ளும் ஊழியர்கள் பலர் அப்பகுதியில் வீசும் துர்நாற்றம் காரணமாக உணவை உட்கொள்ளமுடியாது வீசியதாகவும், சிலர் உணவை எடுத்துக் கொண்டு வேறிடங்களுக்குக் கொண்டுசென்று சாப்பிட்டதாகவும் —ஊழியர்கள் மத்தியில் கவலை தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## நல்லூரைச்...

(முதலாம் பக்கத் தொடர்)

வும் —

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தை தாக்கி அழிக்க குண்டு பொருத்தப்பட்ட வான் ஒன்றை தாம் ஓட்டிச்சென்றதாக அவர் ஒப்புக்கொண்டுள்ளார் எனவும் — பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)


# COM BANK SPRC TROPHY

கொமர்ஷல் வங்கி யாழ். கிளையின் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும்

**20 பந்துர் பரிமாற்றங்களைக்**

கொண்ட

**மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆரம்ப விளையாட்டுக்கள்**

**S. V. MURUGESU**

நிறுவனத்தின் ஆதரவில் நடைபெற்றன.

மேற்படி போட்டிகளில் கால் இறுதியாட்டங்களுக்குத் தெரிவாகியிருந்த அணிகள்;

★ கொமர்ஷல் வங்கி அணி
எதிர்
பரி பேதுறு ஆலய அணி

★ கல்வித் திணைக்கள அணி
எதிர்
புனித பத்திரிசியார் ஆசிரியர் அணி

★ யாழ்.பல்கலைக்கழக உத்தியோகத்தர் அணி
எதிர்
இலங்கை வங்கி அணி

★ யாழ். மாநகர சபை அணி
எதிர்
யாழ். பலநோக்கு கூ. சங்க அணி

மேற்படி போட்டிகள் **14 - 09 - 97. 20 - 09 - 97** ஆகிய தினங்களில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று பின்வரும் அணிகள் அரை இறுதி ஆட்டங்களுக்குத் தெரிவாகின.

★ கல்வித் திணைக்கள அணி
எதிர்
பேதுறு ஆலய அணி

★ பல்கலைக்கழக உத்தியோகத்தர் அணி
எதிர்
யாழ். பலநோக்கு கூ. சங்க அணி

இப் போட்டிகள்
இன்று 21-09-97 காலை 9.30 மணிக்கு
யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில்

**CITY MEDICALS**

நிறுவன ஆதரவில் நடைபெறும்.

இச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி

**S. M. FERNANDO**

நிறுவன ஆதரவில்
27-09-97 பிற்பகல் 1.30 மணிக்கு
யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

- கொமர்ஷல் வங்கி
விளையாட்டுக் கழகம் -

(C/1609)


## கண்ணீர் அஞ்சலி

மானிப்பாய் இந்துக் கல்லூரி 98 கலைப் பிரிவைச் சேர்ந்த எமது சக மாணவன்

**ஜெயந்தன்**

அவர்களின் அன்புத் தந்தையார்

**ஜெயசிங்கம்**

அவர்கள் 19-09-1997 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

உயர்தர மாணவர் மன்றம்,
மானிப்பாய் இந்துக் கல்லூரி.

(47437)

## கண்ணீர்ப் பூக்கள்

பூத் தொண்டு செய்த புனிதனார்

**அமரர் வல்லிபுரம் பசுபதி**

(முன்னாள் போஷகர், கல்வியங்காடு வீரபத்திரர் சுவாமி தேவஸ்தானம்)

வீரபத்திரப் பெருமானின் நித்திய பூசைக்கு பூத் தொண்டு செய்து வந்த பசு அப்புவின் மரணச் செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வீரபத்திரப் பெருமானின் திருவருளை வேண்டுகின்றோம்.

- பரிபாலன சபை

கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.
(49768)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21 - 09 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org